வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சங்க இலக்கியத்தில் நெய்தல் திணை ஒரு பார்வை

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**முன்னுரை:**

மனிதனின் இயல்பான வாழ்க்கை முறையை இயற்கையோடு அமைத்துக் கூறுவது சங்க இலக்கியங்கள் ஆகும். அவற்றுள் அக இலக்கியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதிலும் சொல்லவேண்டிய கருத்துக்களை மறைமுகமாகச் சொல்லும் வழக்கம் பழந்தமிழர்களிடையே இருந்துள்ளன. அவை உள்ளுறை, இறைச்சி என்னும் குறிப்புப் பொருளாகவந்துள்ளன. மேலும், அவ்விலக்கியங்களைத் திணை அடிப்படையில் ஆராய்ந்த முன்னோர்கள் திணைக்குரிய முதல், உரிபொருள்கள் மூலம் அக்கால நெய்தல் திணையைச் சார்ந்த மக்களின் வாழ்வியலையும் பொதுவான செய்திகளையும், இலக்கிய நயங்களையும் எவ்வாறு எடுத்துரைத்துள்ளனர் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**அருஞ்சொற்பொருள் விளக்கம்:**

முதற்பொருள் - கருபொருள் - உரிபொருள் - புணரி – காழ் முளை – நுவ்வை -

**ஆய்வுச் சுருக்கம்:**

சங்க இலக்கியங்களில் மற்ற திணைப்போன்று நெய்தல் திணையிலும் வாழ்ந்த மக்கள் கடல்கடந்து மீன் பிடித்து தம்முடைய வாழ்வை நடத்தியவர்களாய் மட்டும் இல்லாமல், பரவர்கள் மற்ற மற்ற நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையை வாழ்ந்தவர்களாய் காணப்படுகின்றனர். மேலும், இவர்களின் வீரம் சார்ந்த வாழ்க்கைமுறையை நெய்தல் திணை விளக்குவதாய் உள்ளது.

**நெய்தல் திணையின் இலக்கியக் கட்டமைப்பு சிந்தனைகள்:**

நெய்தல் திணையைப் பாடியவரான அம்மூவனார் பாடிய பாடல்களாக கிடைப்பன மொத்தம் 127 பாடல்கள் ஆகும். நற்றிணைத்தொகுப்பில் 10 பாடல்களும் குறுந்தொகையில் 11 பாடல்களும் ஐங்குறுநூறில் 100 பாடல்களும் இந்நிலையில் இவரின் பாடல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் பல ஆசிரியர்கள் நெய்தல் திணைப் பாடல்களைப் பாடியுள்ளனர். மேலும், சங்ககாலப் புலவர்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்தவர்கள். மிக நுண்மையான, அற்பான பொருள்களிலும் கூட, அவர்கள் மனம் ஊடுருவிச் செல்லும். மிகைபடச் சொல்வதென்பதையே அவர்கள் அறியாதவர்கள். என்பதை வெளிப்படுத்துவதாகவே அவர்களின் எண்ணப்பதிவுகள்

வெளிப்படுகின்றன. இந்நிலையில் நெய்தல் நிலத்தின் சிறப்புகளாக, முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் அமைப்பினை இயம்பலாம்.

**நெய்தல் நிலத்தின் முதற்பொருள்**

நிலமும் பொழுதும் ஆகும். **நிலம்**: கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும்.

பொழுது பெரும்பொழுது சிறுபொழுது ஆகும். **பெரும்பொழுதை** நம்பியகப்பொருள் குறிப்பிடும்போது,

"காரே, கூதிர், முன்பனி, பின்பனி
சீரள வேனில் வேனில்என்றாங்கு
இருமூன்ற திறத்து தெரிபெரும் பொழுதே"[1]

**சிறு பொழுது**

"எற்பாடு,
நெய்தல் ஆதல் மெய்பெற தோன்றும்"[2]

என்றும்,

"வெய்யோன் பாடு நெய்தற் உரித்தே"[3]

என்று நம்பி அகப்பொருளும் தொல்காப்பியமும் சான்று பகர்கின்றன.

**கருபொருள்:**

முதற்பொருளாகிய நிலத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் பொருள்களே கருப்பொருள்கள் ஆகும்.

தெய்வம், உயர்ந்தோர் அல்லோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண் மற்றும் தொழில் என்னும் பதினாங்கும் ஆகும். இவற்றில் சிலவற்றைக் காண்போம்.

**செடி கொடி மர வகைகள்:**

நெய்தல் கொடிகள், அடும்பு, தாழை, புன்னை, ஞாழல், பெண்ணை, முண்டகம், தில்லை, வேம்பு, செருந்தி போன்றவையாகும்.

**அடும்பு:**

இவை கடற்கரையினை அடுத்து மணற் பரப்பில் பரந்து படரந்து கிடக்கும் கொடி: 'அடம்பென்றும்' 'அடம்பங் கொடியென்றும்' வழங்கப்பெறும். இதன் இலை பிளவுபட்டிருக்கும். கொடி சற்றுச் செந்நிறமாக இருக்கும். சிறிது மங்கிய கருநிறமுடைய கொடி வகையடும்பும் உண்டு. இவற்றின் பூ வெண்ணிறமாயும் மங்கிய செந்நிறமாயும் மணி வடிவினையுடையதாயும் இருக்கும்.

**நெய்தல் கொடிகள்:**

கடற்கறை அடுத்த வளைந்த மணிநீர்க் கருங்கழியின் பக்கமெல்லாம் பூத்துக் குலுங்கும் நெய்தற் கொடிகள். இவை பசிய இலைகளுக்கு மேலே திரண்ட காம்புடன் மிளிரும் பூக்களைக் கொண்டிருக்கும். வெள்ளம் பெருகுந்தோறும் நீரில் மூழ்கும் அம்மலர்கள் மகளிரின் கண்களைப் போன்று இருக்கும். மாலையில் குவிந்து வைகறையில் மலர்ந்து தேன் பிலிற்றும் கொத்தான நீலவண்ண நெய்தலோடு சில இடங்களில் செருந்தியோடும் காணப்படும்.

**முண்டகம்:**

முண்டகம் என்னும் ஒருவகை முள்ளிச் செடியும் முயங்கித் தோன்றும்: தாழையும் தழைத்து வெண்மல் விரித்து நறுமணம் வீசி நிற்கும்.

**தாழை:**

நெய்தல் நிலத்தின் புன்புலால் நாற்றத்தை மாற்றி நறுமணம் வீசி, நலம் பயப்பது என்று புலவர்களின் கருத்து. தாழையில் ஆண், பெண் என்ற இருவகை உள்ளது என்றும், ஆண்தாழை காய்க்கும் பெண் தாழை காயாது என்று இ. வை. ஆனந்தராமையா் குறிப்பிட்டுள்ளாா். இது மின்னலால் பூக்கும் தாவரம் என்று பழம்தமிழா் கூற்றாகும். ‘தலை விரித்துக் கிடக்கும் பேய் போன்றது’ என்று வெண்கண்ணனாா் தாழையின் தோற்றத்தைக் குறிப்பிட்டுள்ளமை சால சிறந்தது.

**உரிப்பொருள்:**

நெய்தல் திணையின் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும். இவ்வுரிப்பொருள் முதற்பொருள், கருப்பொருள்களை விட சாலச் சிறந்தது என்று புலவா்கள் உரைப்பா். இவ்வாரான உரிப்பொருள் நிகழ்ச்சிகளின் சிறப்பைப் புலவா்கள்

தலைவன், தலைவி, தோழி முதலாயினரோடு எவ்வாறு பின்னிப்பிணைந்து எழிலுறப் பொருத்திக் காட்டுகின்றனா் என்பதை இங்கு காண்போம்.

கானலஞ்சோலை; ஞாயிறு மலையிற்படும் மாலை (இதனையே எற்பாடு என்பர் இலக்கணநூலோர்) அதன் எதிரே ‘ஓ’ என ஓலமிடும் நீலநிறக் கடல் அக்கடலும், கழியும், கானலும் தனிமையைப் பிரதிபலித்துக்கொண்டிருக்கும் புல்லினமெல்லாம் தம் புகழுக்குத் திரும்பும் துன்பம் துவலும் சூழ்நிலையே சுற்றிலும் காணும்.

“அங்கே சோகமே உருவெடுத்த தலைவி, தோழியின் துணையுடன் வந்து தன் கதாலின் வருகக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். அவன் வாராமையை எண்ணி எண்ணிக் கண்ணீர் ஆறாய்ப் பெருக அழுது புலம்புவாள். உற்றிழியுதவும் அவள் உயிர்த்தோழி பலவாறு ஆறுதல் கூறித் தோற்றுவாள். நேரம் கடத்தும் தலைவன் வராதிருக்கும் காரணங்களை நினைந்து நினைந்து தலைவி மேலும் கவல்வாள்; கலங்குவாள். அவன் வரும் வழியின் துன்பத்தினை எண்ணி ஏங்குவாள். சிற்சிலகால இடையீடுகளால், குறிப்பிட்டபடி சந்திக் இயலாமல் போகும் வருத்தமானநிலை குறித்துக் குமறிக் குமைவாள். தலைவனும் ஒரோவழி, அல்ல குறியாலும் இடையீட்டாலும் ஏமாற்றமடைந்து அல்லலுற்று இரங்குவான்.”[4]

இந்தப் பிரிவின் துயருக்கு முத்தாய்ப்பு வைத்தார்போன்று, அந்தச் சூழலின் இயற்கை நிகழ்ச்சிகளும் ஒத்துத்தோன்றுவது வியப்பினைத் தருவாதாய் தோன்றும் எவ்வாறெனில்.

பிரிவால் வாடி போதுறும் தலைவியில் பின்புறத்தே, ஒற்றைப் பனைமரத்தில் ஆண் அன்றிலைப் பறிகொடுத்துவிட்டுத் தன் பச்சிளம் பார்ப்பினை அணைத்துக்கொண்டு நரலும் அன்றிற் பேடையின் பரிதாபக்காட்சி!

எதிரே! ஓலமிடும் பேரலைகள் வீசியெறியும் மீன்களைக் கவ்விக் கொண்டு விரைந்து அயலிலுள்ள வயற்புறத்தில், தலைச் சூலால் வயவுற்று வருந்தும் பெண் நாரைக்குப் பெட்புடன் ஊட்டித் திரும்பிவரும் ஆண் நாரையின் பாச உணர்வு!

அருகில் உள்ள கருநாவல் மரத்தின் அடியில், வளையின் வாயிலில் காத்து நிற்கும் காதல் பெடைநண்டுக்குக் கனியொன்றினை உருட்டிச் சென்று கனிவுடன் அளித்துக் களிக்கும் அலவனின் அக்கறையும்!

தாழையில், மணம் வீசும் மலரினின்றும் பிரித்தறியாதபடி காத்து நிற்கும் பெண் கொக்கிற்கு, துடிக்கும் இறாலை மிடுக்குடன் பற்றிச் சென்று அலகைப் பிளந்து ஊட்டும் ஆண் கொக்கின் ஆர்வமும்!

வெண்மணல் பரப்பில், அடும்புக கொடியைச் சாய்த்து, பெண் ஆமை இட்டுவைத்த முட்டைகளை, ஆதரவோடு அடை காத்துக் கிடக்கும் ஆண் ஆமையின் பொறுப்புணர்ச்சியும்!

பகலெல்லாம் கனன்று காய்ந்த கதிரவனின் வெம்மையைத் தாங்காது தவிக்கும் தன் நிலக்காதலியைத் தழுவித் தண்மை யூட்டத் தென்றல் தோழியியும் உடனழைத்துக் கொண்டு, நுரைசிந்த விரைந்தோடி வரும் திரைக்கடலின் பரிவுணர்ச்சியும்!

இவையனைத்தும் தலையின் பிரிவுக் கடுங்கனலில் பெய்யும் நெய்யாகத் துயர் செய்யும் அன்றோ!

இத்தகு அற்புதப் பின்னணியைப் பொற்புறத் தம் பாக்களில் பின்னிப் பிணைந்திருக்கும் கவிஞர்களின் கற்பனைகள் அல்ல, எங்கோ மூலை முடுக்குளில் மறைந்த அப்படியே பெரிதாகக் காட்டும் நுண்மாண் நுழைபுலன் கொண்ட புலவர் பெருமக்களின் நுண்மையான திறனை என்வென்று புகழ்வது!

**நெய்தல் திணையின் பண்பாட்டுச் செய்திகள்:**

குறிஞ்சித்திணையில் உள்ளது போல் வரைவுகடாவுதல் (மணம் செய்து கொள்ளுமாறு வேண்டுதல்) வரைவு நீடித்தல் பகற்குறி, இரவுக்குறி போன்ற அகவாழ்க்கை நிகழ்வுகள் நெய்தல் திணையிலும் உண்டு. அக நிகழ்வு அல்லாத, நெய்தலுக்கே உரிய சிறப்பான நிகழ்வுகளையும் காணமுடிகிறது. அவற்றில் சிற்றில் விளையாடல், கூடல் இளைத்தல், மீன் உணக்கல், மீன்கறி ஆக்கல், இயற்கையை உறவாக நினைத்தல் இது போன்றவை குறிப்பிடத்தக்கன.

**சிற்றில் விளையாடல் என்ற பண்பாட்டுச் செய்திகள்:**

**சிற்றில் விளையாடல்** என்பது கடற்கரை மணலில் பருவமகளிர் வீடுகட்டி விளையாடுவதைக் குறிக்கும்.

“ஊதை ஈடிய உயர்மணல் அடைகரை
கோதை ஆயமொடு வண்டல் தைஇ
ஓரை ஆடியினும் உயங்கும் நின் ஒளியென”[5]

குடவாயிற் கீரனார் பாடலில் வாடைக்காற்றில் குவிக்கப்பட்ட உயர்ந்த மணல் குன்றை உடையது நீர்கரை. அந்தக்கரையில் அழகிய மாலையை அணிந்த பருவமகளீர் தோழிகளுடன் வீடுகட்டி விளையாடினாலும், ‘உன் உடம்பின் ஒளிவாடும், அங்குப் போகாதே’ என்று சினப்பாள் தாய், அப்படிப்பட்டதாய் உன் வருகையை அறிந்தால் தலைவியை வீட்டுக்காவலில் வைத்துவிடுவாள் என்றுதோழி கூறுகிறாள்.

மேலும், கடற்கரைச் செல்லும் இளம்பெண்களின் செயல்பாடாக அலைகள் அடிக்கும் இடத்தில் காலாலும் கையாலும் எதையாவது வரைந்து அலைவந்து அழிக்காமல் இருக்குவேண்டும் என்று நினைத்தபோது, அலைகள் வந்து அதனை அழித்துவிடும் தன்மையை, மதுரை மருதளினநாகனார்,

“மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி
இளையோர் ஆடும் விரிமனை சிதைக்கும்”[6]

என்ற பாடல்வரிகள் நெய்தல் திணையைச் சார்ந்த மகளீர் தோழிகளோடு சேர்ந்து மணல் வீட்டைக்கட்டி மகிழ்ச்சியாக பொழுதுபோக்குவர் என்பது தெளிவு.

**இயற்கையை உறவாக நினைத்தல் பற்றிய செய்திகள்:**

நெய்தல் நில மக்கள் இயற்கைப் பொருள்களையும் உறவாக நினைப்பார்கள். புன்னை மரத்தை உறவாக நினைத்த நெய்தல் மகளிரை நற்றிணைப் பாடலில் காணலாம்.

மணலில் புன்னைக் காயை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர் சிறுமியர். வெள்ளிய மணலில் விளையாட்டாகப் புன்னைக் காயை அழுத்திப் புதைத்தாள் சிறுமியாய் இருந்த தலைவி பின்னர் அக்காய் முளைக்க ஆரம்பித்தது. வளர்ந்தது தலைவியும் வளர்ந்தாள் தான் வளரத்த புன்னை மரத்தை அவளது தங்களை என அறிமுகப்பத்தினாள் அவள் தாய். அம்மரத்தின் கீழ் அவளது காதலன் அவளுடன் உறவாட வந்தான் அவள் நாணம் உறுகிறாள். அதைத் தோழி தலைவனுக்குக் கூறுகிறாள்.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"[7]

இந்தப் புன்னை உங்களை விடச் சிறந்தது: உங்களுக்குத் தங்கை என அன்னை கூறினாள். அத்தங்கையின் அருகில் நின்று உன்னோடு பேச நாணுகிறாள் தலைவி ஆகவே நீ அவளை விரைவில் திருமணம் செய்து கொள் என்ற குறிப்புடன் தோழி பேசுகிறாள். இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையை வாழும் மனிதர்கள் இயற்கைப் பொருள்களையும் தம் உறவாக நினைப்பது அவர்தம் மென்மையான பண்பு நெய்தல் திணை மக்களின் பண்பாட்டை உணர்த்துவதாய் அமைகின்றது.

**மீன் உணக்கல் பற்றிய செய்திகள்:**

நெய்தல் நில மக்கள் கடலில் உள்ள மீன்களையெல்லாம் வாரிக் கரையில் கொட்டிவிட்டனரோ என்று எண்ணும் அளவிற்கு மீன் கொள்ளையினைத் தங்கள் பாக்கத்திற்கு அருகில் கொட்டி வைப்பர் என்று தி. முத்து கண்ணப்பன் குறிப்பிடுகின்றார். அந்த மீன் களைவிற்றது போக எஞ்சிய மீன்களையும் விற்பனைக்காலம் கடந்த பின்னும் பிடித்த மீன்களையும் உப்பிட்டு மகளிர் வெயிலில் உணக்குவர். உணங்கிய மீனைக் கருவாடு என்பர்.

நிணமிகு பெரிய மீன்களைத் துண்டங்களாக வெட்டி உப்பிலிட்டு அமிழ்த்தியதை உப்புக்கண்டம் என்பர். வெண்மணலில் பரப்பி வெயிலில் புலர்த்திப் புள்ளினங்கள் அவற்றைப் கவராமல்பரதவ மகளிர் காவல் காக்கும் செய்தியினை,

**"உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்**
**மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்**
**கல்லென் சேரிப் புலவற் புன்னை**
**விழவுநாறு விளங்குஇணர் அவிழ்ந்து உடன் கமழும்"**

நற்றிணை உலோச்சனார் பாடல் வழியாக காணமுடிகிறது. இதோடு மட்டும் அல்லாமல் அங்கு நடப்பட்டிருந்த புன்னை மரத்தின் வழியாக அறிவியல் செய்தியும் காணப்படுகிறது. அவை எவையெனில் வெண்மணலில் பரப்பில் வெயிலில் புலர்த்திய

மீனின் நாற்றம் பாக்கம் எங்கும் வீசிக்கொண்டிருக்கும். அந்த நாற்றத்தை அங்குள்ள புன்னையின் நறுமணம் அப்புலால் நாற்றத்தை மாற்றும் என்ற செய்தியை இப்பாடலின் வழியாக அறிமுடிகிறது.

**நெய்தல் திணையின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றிய செய்திகள்**

ஒரு நாட்டின் வரலாற்றினை நன்கு அறிய துணைபுரிவன சிறப்புமிக்க அந்நாட்டு இலக்கியங்கள் எனலாம். சங்க இலக்கியங்களில் முத்தமிழ் வேந்தர்கள், சிற்றரசர்கள், வள்ளல் பெருமக்கள் பற்றிய செய்திகளும், அவர்கள் நிகழ்த்திய போர்க்களச் செயல்களும் பழம் பெரும் நகர்கள் பற்றிய குறிப்புகளும் இன்ன பிற செய்திகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவற்றில் சில நகர்களான அலைவாய், குடந்தை, கொற்கை, தொண்டி, காஞ்சி, காவிரிபூம்பட்டினம் போன்றவையாகும்.

நெய்தல் நிலத்தே பல போர்கள் நடந்துள்ளன. நெய்தல் நிலம் போர்களமாயிருந்திருக்க வேண்டும். அதனால் தான் 'தும்பை தானே நெய்தலது புறனே' என்ற தொல்காப்பியரின் நூற்பாவின் பொருளாய் 'இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலின், அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டும் அதலால் அந்நிலம் கடல் சார்ந்த வழியல்லது இன்மையானும்' என்ற இளம்பூரணர் கூறியுள்ளதும் நினைவுக்கூறத்தக்கதாகும்.

**மன்னர்களும் போர்நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள்:**

நெய்தல் நிலத்துக்குரிய புன்னை, **திதியன்** என்னும் குறுநில மன்னனின் காவல் மரமாயிருந்துள்ளது. அன்னியென்னுங்குறுநில மன்னன் வலிமைமிக்க ஊர்களையும், வேற்படையினையும் உடைய எவ்வியென்னும் சிற்றரசனது அறிவுரையும் பொருட்பத்தாமல், அத்திதியனைக் குறுக்கைப் பறந்தலை என்னும் இடத்தே எதிர்த்து அவனகு காவல் மரமாகிய அப்பழம்பெரும் புன்னையைத் துணித்தான். அதனைப் பொறாத திதியன், அன்னியைக் கொன்று ஒழித்தான். குறுக்கைப் பறந்தலை நெய்தல் நிலத்தின் சிறந்த பதியெனவும், நெய்தல் நிலத்திற்கு உரிய மரமான புன்னையைக் காவல் மரமாகக் கொண்டிருந்தான் என்ற காரணத்தால் திதியன் நெய்தல் நிலத்தை உள்ளிட்ட நாட்டின் தலைவன் எனவும் கொள்ளத்தாகும். இந்நிகழ்வினை அகநானூறு பாடல்,

"அன்னி குறுக்கைப் பறந்தலை
திதியன் தொல்நிலை முழுமுதல் துமியப்
பண்ணி புன்னை குறைத்த ஞான்றை"[8]

என்ற பாடலின் வழி அறியலாகின்றது. இதனைப் போன்று,

**தித்தன் வெளியன்**

வீரை என்பது ஒரு கடற்கரை: அது போரில் வல்ல வேளிர்களுள் சிறந்த வெளியனின் மைந்தன் தித்தனுக்குரியது: அத்துறையின்கண் பரந்து விரிந்து கிடக்கும் உப்பளங்கள் உடைய இடம்.

**நன்னன்**

பெண் கொலை புரிந்தவன் நன்னன் என்பது இலக்கிய வழியே கண்ட வரலாற்றுச் செய்தி இந்நன்னன் ஒரு குறுநில மன்னன். வேற்படை தாங்கிப் போர்புரிவதில் வல்லவன். இவன், விரைந்தோடும் குதிரைப்படையினை உடைய பிண்டன் முதலான சிற்றரசர்களைத் தோற்றோடச் செய்தவன்.

**பெரியன்**

இப்போது புறையாறு என வழங்கும் புறந்தை புன்னை மரங்கள் நிறைந்த சோலைகள் மலிந்த சோழ நாட்டுக் கடற்கரை நகரைச் சார்ந்தவன்.

**மத்தி**

வில்லேந்திப் போர் புரிவதில் வல்லவனும், வேல் வல்ல வீரப்படைகளை உடையவனுமான மத்தி என்பன் ஒரு பரதவர் தலைவன் ஆவான்.

**விச்சிக்கோ**

இவன் குறுநில வேந்தன். விற்போரில் சிறந்து விளங்கியவன். இவன் வேந்தொடு போர்க்களத்தில் உடன்று போர் புரிந்தகாலை, அங்குப் போர் பரணி பாடப் பாணர்கள் சென்றனர். என்ற குறிப்பும் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து நெய்தல் திணையில் குறுநில மன்னர்கள் பற்றிய செய்திகளோடு இல்லாமல் மூவேந்தர்கள் பற்றிய செய்திகளும் அவர்களில் துறைமுகங்கள் கடற்கரை ஓரமாக இருந்த செய்திகள் நமக்கு இன்றளவும் புலப்படுகின்றன.

**முடிவுரை:**

நெய்தல் திணையில் வாழ்ந்தவர்கள் கடலில் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தியதோடு மட்டும் அல்லாமல் பல வகையான தொழில் ஈடுப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவருகிறது. மேலும், இவர்கள் உப்பு விளைவித்தல், உலர்மீன் தயாரித்தல், முத்தெடுத்தல், கொல்லர் தொழில், தச்சுத்தொழில், பொற்கொல்லர் தொழில், குடிசைக் கட்டுதல் போன்ற குறுந்தொழில்களிலும் ஈடுப்பட்டிருந்தமை சங்க இலக்கியங்களின் வாயிலாக காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ச. திருஞானசம்பந்தம், நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் (துறை விளக்கங்களுடன்), நூ. 11.
2. A. A. மாலவன், தொல்காப்பியப் பொருளதிகாரம், கருத்துரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும், (அகத்திணை இயல்-புறத்திணை இயல்), நூ. 10.
3. ச. திருஞானசம்பந்தம், நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், (துறை விளக்கங்களுடன்), நூ. 17.
4. வித்துவான் டாக்டர் தி. முத்து கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், ப. 259.
5. பொ. வே. சோமசுந்தரனார், (உ.ஆ) அகநானூறு-களிற்றிநிறை யானை, பா.எண், 60: 9-11.
6. பொ. வே. சோமசுந்தரனார், (உ.ஆ) அகநானூறு-களிற்றிநிறை யானை, பா.எண், 90: 9-11.
7. முனைவர் த. கோ. பரமசிவம் நற்றிணை மூலமும் உரையும் ப. 62.
8. புலியூர்க் கேசிகன், அகநானூறு உரையும் மூலமும், பா.எண் 45: 9-11.

**கருவி நூல்கள்**


1. சோமசுந்தரனார் பொ. வே. (உ.ஆ) அகநானூறு – (மணிமிடைபவளம், நித்திலக்கோவை), தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை – 1,

1973.

2. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ) புறப்பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 154, டி, டி கே சாலை, சென்னை – 14. 2002, 2004.

3. திருஞானசம்பந்தம். ச, நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் (துறை விளக்கங்களுடன்), கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு – 613 204.

4. துரைசாமிப்பிள்ளை, சு. ஔவை புறநாநூறு -1, 2 செவ்வியல் கருவூலம் (சங்க இலக்கியம்), தமிழ்மண் அறக்கட்டளை, "பெரியார் குடில்", செவாலியே சிவாசிகணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை – 600 017, 2018.

5. மாலவன் A.A. தொல்காப்பியப்பொருளதிகாரம், கருத்துரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600113, 2005.

6. முத்து கண்ணப்பன். தி சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், அதிபத்தர் பதிப்பகம், 6, வசந்தா பிரஸ் சாலை, அருணாச்சலபுரம், சென்னை - 600 020 முதற்பதிப்பு 1978.